இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 22 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 15 – சனிக்கிழமை 31 ஆகஸ்டு 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 22 : Thiruvalluvar Year - 2055 - Aavani 15 - Saturday 31 August 2024 - Dak 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (29.8.2024) அமெரிக்கா நாட்டின், சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 150 கோடி ரூபாய் முதலீட்டில் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கோயம்புத்தூர் சூலூரில் குறைக்கடத்தி உபகரணங்களுக்கான தயாரிப்பு மேம்பாடு மற்றும் உற்பத்தி வசதி (Product development and manufacturing facility for Semiconductor equipment) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, அமெரிக்கா நாட்டின் சான்பிரான்சிஸ்கோவிற்கான இந்திய துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி, ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் ரமாகாந்த் அலபதி, முதன்மை நிதி அலுவலர் பிரபாத் மிஸ்ரா மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (29.8.2024) அமெரிக்கா நாட்டின், சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னை, தரமணியில் செமிகண்டக்டர் உற்பத்தி மற்றும் உபகரணங்களுக்கான மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் (Advanced artificial intelligence enabled technology development center for semiconductor manufacturing and equipment) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, அமெரிக்கா நாட்டின் சான்பிரான்சிஸ்கோவிற்கான இந்திய துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி, அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனத்தின் செமிகண்டக்டர் தயாரிப்புகள் குழுமத்தின் தலைவர் டாக்டர் பிரபு ராஜா, துணைத் தலைவர் சதீஷ் குப்புராவ் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தெற்காசியாவிலேயே – முதலீடுகளை ஈர்க்க உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது!

## உயர்ந்த வாழ்வியல் நெறி கொண்ட அமெரிக்க முதலீட்டாளர்களை – தமிழ்நாடு சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கக் காத்திருக்கிறது!

# வளர்ச்சி மிகுந்த தமிழ்நாட்டில் தொழில் துவங்க வாரீர்!

## சான்பிரான்சிஸ்கோ – தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

**சான்பிரான்சிஸ்கோ, ஆக. 31 -**

**அமெரிக்க நாட்டின் - சான்பிரான்சிஸ்கோ நகரில் நேற்று முன்தினம் (29.08.2024) நடைபெற்ற, "தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில்" உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தெற்காசியாவிலேயே முதலீடுகளை ஈர்க்க உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் உரையாற்றுகையில், "உயர்ந்த வாழ்வியல் நெறி கொண்ட அமெரிக்க முதலீட்டாளர்களை தமிழ்நாடு, சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கக் காத்திருக்கிறது! எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி மிகுந்த மாநிலமாக விளங்கும் தமிழ்நாட்டில் தொழில் துவங்க வாரீர்!" என அன்பழைப்பு விடுத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.8.2024) அமெரிக்கா நாட்டின், சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை வருமாறு:

சான்பிரான்ஸிஸ்கோவின் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்பதில் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். உலகின் மிகப்பெரிய மதிப்புமிக்க பெருமை அமெரிக்காவிற்கு உண்டு என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற உண்மை. அப்படிப்பட்ட அமெரிக்காவிற்கு நான் வந்திருப்பதை பெருமையாக கருதுகிறேன்.

இந்தியாவில் உள்ள தமிழ்நாடு என்ற மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் நான். திராவிட முன்னேற்றக் கழகம் என்ற 75 ஆண்டுகள் பழமையான அரசியல் இயக்கத்தின் தலைவராக நான் இருக்கிறேன். இப்போது தமிழ்நாட்டை ஆறாவது முறையாக ஆட்சி செய்து கொண்டிருக்கிறோம். இந்திய நாட்டில் பலமுறை எங்கள் கூட்டணி பிரதமர்களை உருவாக்கி ஆட்சியில் இருந்திருக்கிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.8.2024) அமெரிக்க நாட்டின், சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் உரையாற்றினார். இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, அமெரிக்கா நாட்டின் சான்பிரான்சிஸ்கோவிற்கான இந்திய துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

எனது தந்தையைப் பற்றி உங்களில் பலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் 5 முறை முதலமைச்சராக இருந்திருக்கிறார். இந்திய நாட்டில் பல பிரதமர்களை உருவாக்கியிருக்கிறார். அப்படிப்பட்ட புகழுக்குச் சொந்தக்காரர் அவர். 1971ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது, தலைவர் கலைஞர் அமெரிக்காவிற்கு வருகை தந்தார். இப்பொழுது நான் வருகை தந்திருக்கிறேன்.

### இந்திய நாட்டில் பல பிரதமர்களை உருவாக்கியவர் எனது தந்தை முத்தமிழறிஞர் கலைஞர்!

**"எனது தந்தையைப் பற்றி உங்களில் பலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் 5 முறை முதலமைச்சராக இருந்திருக்கிறார். இந்திய நாட்டில் பல பிரதமர்களை உருவாக்கியிருக்கிறார். அப்படிப்பட்ட புகழுக்குச் சொந்தக்காரர் அவர். 1971ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த போது, தலைவர் கலைஞர் அமெரிக்காவிற்கு வருகை தந்தார். இப்பொழுது நான் வருகை தந்திருக்கிறேன்."**

### இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரம், தமிழ்நாடு!

புகழ்பெற்ற அமெரிக்க நிறுவனங்கள் பல இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்களை நடத்தி வருகின்றன. சென்னை பற்றி நீங்கள் அனைவரும் நன்றாக அறிந்திருப்பீர்கள். இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. 48 விழுக்காடு நகரமயமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்களில் அதிகளவில் நகரமயமாக்கப்பட்டுள்ள மாநிலம் தமிழ்நாடு தான்.

நிலையான வளர்ச்சி இலக்குகளைச் செயல்படுத்துவதில் முதல் மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது. சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு வளர்ச்சி மையங்கள் மாநிலம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மனிதவளங்கள் மற்றும் திறன்களை முன்வைத்து வளர்ச்சியை மேற்கொண்டு வரும் மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது.

இந்தியாவின் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில் கிட்டத்தட்ட 20 விழுக்காடு தமிழ்நாட்டில் உள்ளது. இந்தியாவின் தேசிய சராசரியைவிட இருமடங்கு அதிகமாக உயர்கல்வியில் மாணவர்கள் சேரும் விகிதத்தை 48 சதவிகிதம் கொண்ட மாநிலம் தமிழ்நாடு.

### இந்தியாவிலேயே உயர்கல்வியில் தலைசிறந்த மாநிலம் தமிழ்நாடு!

இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் சுமார் 45 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தெற்கு ஆசியாவில் சுகாதாரச் சுற்றுலாவில் முன்னணி மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது. இத்தகைய வளர்ச்சி மிகுந்த மாநிலமான தமிழ்நாட்டிற்கு தொழில் துவங்க வருமாறு உங்களை எல்லாம் அழைப்பதற்காகதான் நான் இங்கே வருகை தந்திருக்கிறேன்.

### தமிழ்நாட்டில் மட்டும் – 300 க்கும் மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்கள்!

தமிழ்நாட்டிற்கும், அமெரிக்காவிற்கும் தொழில்ரீதியான உறவு எப்போதுமே பலமாக இருந்து வந்துள்ளது. 300க்கும் மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் திட்டத்தினை நிறுவியுள்ளனர்.

சேவைகள் மற்றும் சேவை மையங்கள், உலகளாவிய திறன் மையங்கள், உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உட்பட பல்வேறு துறைகளில் தமிழ்நாட்டில் மேற்கொண்டிருக்கிறார்கள். இதை தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கான ஒரு அங்கீகாரமாகவே நான் கருதுகிறேன்.

காக்னிசன்ட், ஃபோர்டு, கேட்டர்பில்லர், ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ், சான்மினா, விஸ்டியான், எச்.பி, அப்ளைடு மெட்டீரியல்ஸ், ஜெனரல் எலெக்ட்ரிக், யுபிஎஸ், ஃபைசர், ஹனிவெல், பேபால், குவால்காம் போன்ற பெரும் நிறுவனங்கள் தங்களது உற்பத்தித் திட்டங்களை தமிழ்நாட்டில் நிறுவியுள்ளன. இந்த வரிசையில் இன்னும் பல நிறுவனங்கள் தமிழ்நாட்டிற்கு வரவேண்டும். ஏற்கனவே, தொழில் துவங்கியுள்ள நிறுவனங்களும், தங்கள் தொழிலை இன்னும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உங்களது ஒவ்வொரு நிறுவனமும், ஒவ்வொரு விதத்தில் சிறந்தது. எனவே உங்கள் ஒவ்வொருவரையும் மிக முக்கியமாக நான் கருதுகிறேன்.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்